**உதவி செயற்பொறியாளர்(வே.பொ)(பொ) திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை**
**பிறப்பிப்பவர்: திரு. த. கண்ணதேவன்., பி.இ.(விவ).,**

செ.மு.ஆணை எண்.இ/2770/2023

நாள். 03.02.2025

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திருமதி.த.லாவண்யா, இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) – இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) பதவியியல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை:
1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.அபபி3/23567/2019 நாள்.20.07.2019.
2. சென்னை, செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.1919/PSD–D2/2023, நாள்.02.09.2023.
3. சென்னை, செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.1919/PSD–D2/2023, நாள்.16.11.2023.
4. சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி5/92705/2023 நாள்.08.12.2023.
5. சென்னை, தலைமைப்பொறியாளர்(வே.பொ) அவர்களின் செயல்முறை ஆணை எண்: அப2/49207/2023 நாள்: 14.12.2023.
6. திண்டுக்கல், செயற்பொறியாளர்(வே.பொ) அவர்களின் செயல்முறை ஆணை எண்.இ/3875/2023 நாள்.18.12.2023.

----------

ஆணை:

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி போட்டி தேர்வு நடைபெற்ற நாள்:24.07.2022 (அறிவிப்பாணை எண்.07/2022) மூலம் இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) பதவிக்கு தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு(Selected Provisionally), பார்வை(4) முதல் (6) வரையுள்ள செயல்முறை ஆணைகளின்படி இவ்வலுவலகத்திற்கு இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது)–ஆக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.த.லாவண்யா அவர்கள் 22.12.2023 முற்பகல் முதல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது)–ஆக பணியில் சேர்ந்துக்கொண்டார்.

பார்வை (1)–ல் காணும் கடிதத்தின்படி, இளநிலை உதவியாளர் பணியினை அலுவலக தலைவரே பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என்ற தெளிவுரையின்படியும் மற்றும் பார்வை(6)–ல் காணும் செயல்முறை ஆணையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும், திருமதி.த.லாவண்யா அவர்கள் இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது)–ஆக அரசுப் பணியில் சேர்ந்த நாளான 22.12.2023 அன்று முற்பகல் முதல் கிழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination–IV (Group–IV Services)"

த.பி.பா..

Scanned with OKEN Scanner

இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 22.12.2023 முதல் இவரது தகுதிகாண் பருவம் தொடங்கப்படுகின்றது. தனியர் தகுதிகாண் பருவமான இரண்டாண்டு காலத்தை தொடர் மூன்று ஆண்டு பணிக்காலத்திற்குள் திருப்திகரமாக நிறைவு செய்யப்பட வேண்டும்.

மேலும், இவர் தொடர் மூன்று ஆண்டு பணிக்காலத்திற்குள் தகுதிகாண் பருவம் முடித்திட வரையறுக்கப்பட்ட பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்து தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

உதவி செயற்பொறியாளர் (வே.பொ)(பொ)
திண்டுக்கல்

பெறுநர்:

திருமதி .த. லாவண்யா,
இளநிலை உதவியாளர்(பி.அ)– இவ்வலுவலகம்

நகல்: வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: தலைமைப்பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: கண்காணிப்புப் பொறியாளர்(வே.பொ), மதுரை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: செயற்பொறியாளர்(வே.பொ), திண்டுக்கல் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: பணிப்பதிவேட்டிற்கு
நகல்: இருப்புக்கோப்பு
உதிரி – 1

Scanned with OKEN Scanner